# ஆண்டறிக்கை

# 2014

# முகவுரை

1815 இலிருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளரின் கீழ் இலங்கையில் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு இடம் பெற்றுவந்த பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு தேவைப்பட்ட ஊழியத்துக்கான கேள்வியினை நிறைவேற்றுவதன் பொருட்டு ஆங்கில ஆட்சியாளர்களினால் தென் இந்தியாவிலிருந்து ஊழியர்கள் இந்நாட்டிற்கு அழைத்துவரப்பட்டனர். அதன் பின்புலத்திலிருந்து அப்படியாக அழைத்து வரப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உள்ளடங்கலாக நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாக உண்டான பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தேடுவதற்காக 1923இல் தொழில் திணைக்களம் ஆரம்பிக்கப்பட வேண்டி ஏற்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒன்பது (09) தசாப்த காலத்திற்கு மேலாக ஏறக்குறைய 50 சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தொழில் தருநர்களுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே இணக்கத்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்துறையில் புகழ்பூத்த திணைக்களமொன்றாக தொழில் திணைக்களத்தினைக் குறிப்பிட்டுக் கூறக் கூடிய நிலையில் 2014ஆம் ஆண்டறிக்கையினை உங்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதற்குக் கிடைத்த பாக்கியமாக இச் சந்தர்ப்பத்தினை கருதுகின்றேன்.

திறந்த பொருளாதாரம் மற்றும் பூகோளமயப்படுத்தலுடன் இலங்கையில் தனியார் தொழில்துறை துரிதமாக விரிவடைந்து வருகின்றது. அத்துடன் அத்துறைகளை உள்ளடக்கிய வகையில் கைத்தொழில் அமைதியினைப் பாதுகாப்பதனூடாக நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியினை மேம்படுத்துவதில் தொழில் திணைக்களம் பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளது. இந்தவருடத்தின் மீள்பார்வையின் கீழ் அரசதுறை ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குச் சமமான வீதப்படி தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தினை அதிகரிக்கும்படி பலசந்தர்ப்பங்களில் நாங்கள் கேட்டுக்கொண்டதுடன் அதற்கு அநேகமான தொழில் தருநர்களிடமிருந்து சார்பான நல்ல பிரதிபலிப்பு காட்டப்பட்டுள்ளதாக இவ்வேளையில் குறிப்பிட விரும்புகின்றேன். இது தொடர்பான சட்ட ரீதியான பாதுகாப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைககள் எடுக்கப்பட்டு வருகின்றது.

எதிர்பார்க்கப்பட்ட இலக்குளை அடைவதனை நோக்காகக் கொண்டு தலைமை அலுவலகத்தில் சேவையாற்றும் சகல அலுவலர்களுக்கும், அதேபோன்று மாகாண அலுவலகங்கள் மற்றும் உபஅலுவலகங்களிலுள்ள சகலபிரிவுகளிலுமுள்ள அலுவலர்களின் அர்ப்பணிப்பு, பொறுப்பு என்பவற்றை அவர்களின் சக்தியின் அளவுக்கேற்பப் பெற்றுக் கொடுத்தது தொடர்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று தேவைப்படும் பொழுது எல்லாம், வழிகாட்டி ஊக்கமளித்த தொழில், தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் சர்வதேச தொழில் தாபனத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசதுறையின் பொறுப்பினை நிறைவேற்றுவதுடன் பிரமாண்டமான சேவையை நாட்டிற்குப் பெற்றுக் கொடுப்பதற்குப் பணியாற்றியதொழில் திணைக்களத்திலுள்ள சகலருக்கும் சக்தியும், தைரியமும் கிடைக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.எம்.டி.சீ.அமரதுங்க
தொழில் ஆணையாளர் அதிபதி
தொழில் திணைக்களம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | தொழில் திணைக்களம் | 01 - 02 |
| 02. | இணக்கமான கைத்தொழில் அமைதிக்கான முயற்சிகள் | 03 - 06 |
| 03. | சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகளினால் தொழிலாளர்கள் சமூகத்திற்கான பாதுகாப்பு | 07 - 08 |
| 04. | சமூகப் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டவேலைத் திட்டம். | 09 - 10 |
| 05. | தொழில்சார் பாதுகாப்புமற்றும் சுகாதாரம் | 11 - 12 |
| 06. | பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடயப் பங்களிப்பினை நோக்கி | 13 - 15 |
| 07. | தொழில் திணைக்களத்தின் பொதுநிருவாகம் | 16 - 18 |
| 08. | புள்ளிவிபரக் கையேடு | 19 - 24 |
| 09. | பின்னிணைப்பு | 25 - 25 |

# தொழில் திணைக்களம்

## வரலாறு

பிரித்தானியா ஆட்சியின் கீழ் இலங்கையில் வியாபாரப் பயிர்ச் செய்கையான கோப்பி மற்றும் தேயிலைப் பயிர்களின் விரிவாக்கத்தின் முயற்சியின் விளைவு, இந்த நாட்டின் சுதேசிய மக்களின் கூலித் தொழில் என்ற கருத்தினால் அவர்களது பங்களிப்பினை வழங்குவதனை நிராகரித்தார்கள். இதன் பலனாக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மரப் பயிர் விவசாயத் தோட்டங்களில் பாரிய அளவிலான வதிவிட தொழிலாளர்களின் தேவைப்பாட்டினால் தென் இந்தியாவிலிருந்து 1824ல் குறைந்தளவு சம்பளத்தில் இந்திய தமிழ் வேலையாட்களை பெறப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. 1921 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குடிசனக் கணக்கெடுப்பின் பயனாக தொழிலாளர் சமூகத்தின் வளர்ச்சியினால் சனத்தொகை 602,700 நபர்கள் வரை விரிவாக்கம் அடைந்தது.

தொழில் திணைக்களத்தின் ஆரம்பம், இலங்கையின் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காக காலனித்துவ ஆட்சியாளர்களால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட இந்திய குடிபெயர் தொழிலாளர்களின் நலன்புரிக்காக 1923ஆம் ஆண்டு 01ஆம் இலக்க இந்திய குடிபெயர் தொழில் கட்டளைச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக இந்திய குடிபெயர் தொழில் கட்டுப்பாட்டாளர் என்ற பதம் திணைக்களத்தின் உருவாக்கத்தை குறித்து நிற்கின்றது. ஊழியர்படையின் உள்நாட்டுப் பங்களிப்பு மற்றும் அவர்களின் நலன்புரியின் அவசியம் இணங்காணப்பட்டதுடன் தொழில் திணைக்களமானது, இலங்கை உழைக்கும் மக்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினைக் கவனித்திருந்த மிகவும் முக்கியமான தாபனமாகவும், அதே போன்று பணி கொள்வோர் பணியாளர் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துவதற்கான தாபனமாகவும் மாறியிருந்தது.

## நிறுவனத்தின் வகிபாம்

பணிகொள்வோர், பணியாளர் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றிற்கிடையே முத்தரப்பு உறவுகளை சரியான முறையில் பேணுவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாகும்.

## தொலைநோக்கு

சர்வதேச ரீதியில் போட்டித்தன்மையான பொருளாதாரமொன்றிற்கான நிரந்தரமான தொழிற்றுறை அமைதியுடன் கூடிய நாடொன்று

## செயற்பணி

பாதுகாப்பான தொழிற்றுறை அமைதிக்குள் சீரிய வேலைச் சூழலொன்றினைத் தாபிப்பதன் ஊடாக இலங்கையின் அபிவிருத்தி செயன்முறைக்குப் பங்களிப்பு செய்தல்.

## தற்போதைய நிலை

தற்போதைய வகிபாகமாக, இத்திணைக்களமானது 1923ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து கடந்த 91 ஆண்டு காலப்பகுதியில் இத்துறையுடன் தொடர்புபடுகின்ற இலங்கை சட்டவாக்க மன்றினால் அனுமதியளிக்கப்பட்ட 50 சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களும் அவற்றிற்கான திருத்தங்கள் பின்னர் சேர்க்கப்பட்ட நிலையில் நடைமுறைப்படுத்துகின்ற செயன் முறையில் ஈடுபடுகின்றது.

திணைக்களத்தின் செயற்பாடுகள் தேசியப் பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்களிப்பினை விரிவுபடுத்தி விசாலித்திருப்பதுடன், 2014ஆம் ஆண்டின் முடிவில் அத்தகைய விசாலப்படுத்தப்பட்ட வகிபாபத்தினை நிறைவேற்றவுள்ள பதவியணியின் எண்ணிக்கை 2256 ஆகும்.

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் அதிகார எல்லையின் கீழ் முக்கியமான 13 பிரிவுகள் இயங்குகின்றன. திணைக்களத்தின் செயற்பாடுகளைப் பகிர்ந்து கொடுத்தலின் கீழ், 11 வலயத் தொழில் அலுவலகங்கள், 39 மாவட்டத் தொழில் அலுவலகங்கள், 18 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்கள் அலுவலகங்கள் அவைகளின் தலைசிறந்த சேவைகளினால் கைத்தொழில் அமைதியை நோக்கி தொடர்ச்சியான பொறுப்புகளினூடாக இணக்கமான கைத்தொழில் அமைதிச் சூழலை நாடு பூராவும் உருவாக்க தொழிலாளர்களுக்குப் பல வழிகளிலும் சேவைகளை வழங்கி தொழிற்படுகின்றன. மேலும் திணைக்களம் தொழில்தருநர் தொழிலாளர் தலைமுறைகளுக்கு பணியில் முழுமையாக ஈடுபட்டிருத்தலை நிறைவேற்றுவதில் முன்னோடி நிறுவனமாகத் தொழிற்படுகின்றது.

# இணக்கமான கைத்தொழில் அமைதிக்கான முயற்சிகள்

## தேசிய தேவைப்பாட்டினை நிறைவு செய்தல்


''ஒன்றிணைந்த அபிவிருத்தி கோட்பாடு'' இலங்கையின் தேசிய அபிவிருத்தி உபாயம் என தேசிய கொள்கை வகுப்பாளர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டபின் சகல துறைகளிலும் துரிதமான அபிவிருத்தி செயல்முறைகளுக்குட்பட்ட, சகல இலங்கைச் சமூகங்களின் தீர்மானங்கள் நாட்டில் சிறந்த கைத்தொழில் துறை அமைதியை நிலைபெறச் செய்தலாகும்.


சிறந்த அமைதியைக் கொண்டிருத்தலானது தெரிவிக்கப்பட்ட தரமான அபிவிருத்தியை அடைவதற்கு மிகவும் முக்கிய காரணி பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் சிறந்த கூட்டுறவுடனான சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தொழில்தருநர், தொழிலாளர் சமூகம் வேலைத் தளத்தில் சுமுகமான சூழலைப் பேணி, நாளாந்த நடவடிக்கைகளை வேலை நிறுத்தங்கள், பிணக்குகளின்றி ஆற்றுவதாகும். இத்தகைய முக்கியமான தேசிய கடமைக்கு பங்களிப்பு செய்தல் தொழில்திணைக்களத்தின் பொறுப்பும் கடப்பாடுமாகக் கருதி போற்றத்தக்க சேவையை நிறைவேற்றுவதான விடயம் மறுக்க முடியாததொன்றாக சுட்டிக்காண்பிக்கக் கூடியதாக இருப்பதோடு அது போன்று நிரூபிக்கக் கூடிய சேவையை நிறைவேற்றுவதற்கு தொழில் திணைக்களம் 2014 ஆம் ஆண்டில் பல பிரிவுகளினூடாக நாடுபூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சகல வேலைகளும் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தொழில் பரிசோதனைகள்

திருப்தியான ஊழியர் படையணி ஏதாவதொரு நாடொன்றில் இருப்பது அந்த நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த உதவியொன்றினை வழங்குவதாக இருக்கும் நம்பிக்கையின் பார்வையில் சிறந்த கைத்தொழில் அமைதியொன்றிற்காக தொழில் திணைக்களத்திலுள்ள தொழில் அலுவலர்களினால் நாடுபூராகவும் மேற்கொள்ளப்படும் தொழில் பரிசோதனைகள் நாட்டில் உற்பத்தித்திறன் ஒட்டு மொத்தத்தில் உயர்வடைவதற்கு காரணம் என்பது நற்பயனளிக்கக் கூடியதென ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகவுள்ளது. அதேபோன்று, தொழில் பரிசோதனைகள் இடம்பெறாத நாடொன்றில் கைத்தொழில் பிணக்குகள் அதிகரித்து தொடர்ந்து வேலை நிறுத்தம் ஏற்படுவதனால் குறைந்த உற்பத்தித்திறன் இடம்பெறுகின்ற நிலைமையொன்று ஏற்படக்கூடுமென்று கூறமுடியும்.

கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள், தொழில் அலுலவர்களினால் ஆற்றப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கையுயம் கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் அறிவிக்கப்பட்டுள்ள கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையையும் விபரிக்கின்றன.




அறிவிக்கப்பட்ட கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிந்தது. இந்த வகையில் பிணக்குகளை குறைப்பதற்கு இட்டுச் செல்கின்ற பலமான காரணிகள் தொழில் பரிசோதனைச் செயற்பாட்டினைப் பலப்படுத்துதல், திணைக்களத்தின் சமூக சம்பாஷணை மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுப் பிரிவின் மூலம் தாபன மட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியமை அத்துடன் திணைக்களத்தின் வலய மற்றும் மாவட்ட அலுலகங்களினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சியும், ஏனைய பல்வேறு பிரிவுகளினாலும், ஊடகத்தினூடாகவும் உருவாக்கப்பட் விழிப்புணர்வு என்பவையாகும்.

## தொழில் பரிசோதனைகளின் தரம்

தாபன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் பரிசோதனைகளின் தரம்பற்றி இத் திணைக்களம் அக்கறைப்படுகின்றது. இந்தக் குறிக்கோளுடன் திணைக்களமானது வலய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துகின்றது. அத்தகைய 05 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை 2014ஆம் ஆண்டின் காலப்பகுதியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த கூட்டங்களில் தொழில் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றினைத் திருத்துவதற்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## வேலை நிறுத்தம்

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியார் துறை மற்றும் பகுதியளவு அரசு சார் தாபனங்களில் 38 வேலை நிறுத்தங்கள் தொழிற்றிணைக்களத்தின் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அனைத்து வேலை நிறுத்தங்களிலும் 6451 வேலையாளர்கள் பங்கு பற்றியிருந்ததுடன், 37,323 மனித உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த நிலைமை மிகவும் அனுகூலமானதாகும். ஏனெனில் உற்பத்தி கைத்தொழில்கள் மற்றும் உயர் முகாமைத்துவ சேவைகளுக்கிடையில் சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒன்றிணைப்புப் பேணப்பட்டமையினாலும் அத்துடன் கைத்தொழில் உறவுகள் பிரிவின் தீர்க்காலோசனையின் ஊடாக தொழிற்சங்கங்கள் செயற்பட்டமையினாலும் இந்த சிறந்த நிலைமையை அடையக் கூடியதாக இருந்தது.

## பிணக்குகளைத் தீர்த்தல்

கடந்தாண்டு (2013) காலப் பகுதியில் தீர்க்கப்படாதிருந்த கைத்தொழில் பிணக்குகள் உள்ளடங்களாக 6038 முறைப்பாடுகள் திணைக்களத்தின் மாவட்ட உபதொழில் அலுவலகங்களின் வலையமைப்பிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தன. அவற்றையும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், விசேட புலன் விசாரணைப் பிரிவானது தொழில் ஆணையாளர் அதிபதிக்கு தெரிவிக்கப்படுகிற பொது மக்களின் விசேட முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கும், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கின்றது. இந்த ஆண்டு காலப்பகுதியில் அப்பிரிவு 216 விசாரணைகளை நடத்தியுள்ளது.

## சட்ட அமுலாக்கல் பிரிவு

2014 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் இத்திணைக்களத்தின் சட்டச் செயற்பாடுகளை கவனத்தில் எடுக்கின்ற போது பணிக்கொடைக் கொடுப்பனவு, கைத்தொழில் பிணக்குச் சட்டம், வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் சட்டம், சம்பளச்சபை கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழ் அதிக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

மேற்கூறப்பட்டதற்கு மேலதிகமாக கடை அலுவலக ஊழியர்கள் சட்டம், மகப்பேற்று நன்மைகள் கட்டளைச்சட்டம், பெண்கள் இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்கள் சட்டம், ஊழியர் சேமலாபநிதிச் சட்டம், தொழில்நியாய சபைக்கட்டளைகள், வேலையாட்களுக்கான வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சேமலாபநிதி என்பவற்றின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டமையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டது.

அதற்கிணங்க சட்ட அமுலாக்கல் பிரிவினால் 2014 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 6038 ஆகும்.

# சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகளினால் தொழிலாளர்கள் சமூகத்திற்கான பாதுகாப்பு

எழுபது (70) இலட்சத்திற்கு அதிகமான தொழிலாளர்கள் பிரிதிநிதித்துவம் செய்யும் இலங்கையின் தனியார் துறையில் பணிபுரியும் சமூகத்தினருடைய வாழ்க்கையை மேம்படுத்துவதன் மூலம் அவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாப்பதன் பொருட்டு, அவர்களினால் செய்யப்படும் ஊழியத்திற்கு நியாயமானதொரு ஊதியத்தினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்ளக் கூடிய சேவை நிபந்தனையை நடைமுறைப்படுத்தப்படுவதனால் ஊழியத்தை சூறையாட இடமளிக்காது தொழில்தருனர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே நல்லுறவினை மேம்படுத்தும் ஆவலுடன் தீவிரமாக செயற்படும் தொழிற் தரப் பிரிவு தொழிற்றிணைக்களத்திலுள்ள சுறுசுறுப்பான ஒரு பிரிவாகும்.

1941 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம், 1954 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை அலுவலக ஊழியர்கள் (தொழில் மற்றும் ஊதியத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச்சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் ஈடுபடுவதுடன் மேற்பார்வை செய்வதனையும் மேற்கொள்கின்றது. இப்பிரிவானது தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் சேவை நிபந்தனைகள் மற்றும் தொழில் பாதுகாப்பிலும், நலன் புரியிலும் பாதிப்பினை ஏற்படுத்துவது தொடர்பில் நியமங்களை வகுத்தமைப்பதிலும் ஈடுபடுகின்றது.

2014 ஆம் ஆண்டில் தொழிற்தரப் பிரிவினால் கப்பல் செப்பனிடும்துறை மற்றும் துறைமுகப் போக்குவரத்து தொழில் தொடர்பான சம்பளச் சபையினை மீளமைப்புச் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதிகளவான தொழில் தருநர்கள், தொழிலாளர்கள் குழுமத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் துறையென நாளுக்கு நாள் வளர்ந்து வரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக சம்பளச் சபையை நிறுவுவதற்கு தேவையான ஆரம்பத் தரவுகளைச் சேகரிப்பது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

புதிய தொழிலொன்றாக விஸ்தரிக்கப்பட்டு நாட்டின் அதிகளவிலான தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குடிநீரைப் போத்தலில் அடைக்கும் தொழிலை ஐஸ், குளிர்பானம், பழச்சாறு மற்றும் ஜாம் தயாரித்தல் தொழில் தொடர்பான சம்பளச் சபையில் உள்ளடகப்படுவது தொடர்பில் தரவுகளும் விபரங்களும் சேகரிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி நாடுபூராகவும் விரிவடைந்திருக்கும் துப்புரவு சேவைத் தொழிலில் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான தீர்மானங்களை வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் இத்துறையின் சேவை நிபந்தனைகளை ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் தொழிற்தரப்பிரிவின் பங்களிப்புடன் 2014 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தொழிற்தரப் பிரிவினால் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளும் போது பதவிக்காலம் முடிவடைந்த மற்றும் அங்கத்தவர்களின் வெற்றிடங்களுள்ள சம்பளச் சபைகளுக்குப் புதிய அங்கத்தவர்களை நியமிப்பதன் மூலம் அத்தகைய சம்பளச் சபைகளை செயற்படுத்துவது, கொக்கோ, கராம்பு, ஏலக்காய், மிளகு வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழில்தொடர்பாக சம்பளச் சபையின் ஆகக் குறைந்த சம்பள அறிவித்தல் மற்றும் மாதாந்த வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணைப் பரிசீலித்து வெளியிடுதல் இப்பிரிவினால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டின் காலப்பகுதியில் குறைந்தளவு சம்பளம் அதிகரிக்கப்படாத தேயிலை, றப்பர், தெங்கு, கறுவா வளர்தல் தொழிலுக்குரிய 04 சம்பளச் சபையின் ஆகக் குறைந்த சம்பளத்தினை வழங்குதல் ஆகிய அதிகளவான வேலைத்திட்டங்களுக்கு 2014ஆம் ஆண்டில் தொழிற்தரப் பிரிவு தனது பங்களிப்பினை வழங்கியுள்ளது.

# சமூகப் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டம்

இலங்கையில் தனியார்துறை மற்றும் பகுதியளவுசார் அரசாங்கத்துறையில் பணிபுரிகின்ற எழுபத்திரண்டு(72) இலட்சம் தொழிலாளர்களின் ஓய்வுக்கால வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிப்பதற்கு சிறந்த உதவியாக இருக்கும் என்ற நோக்குடன் முக்கியமான சமூகப் பாதுகாப்புத்திட்டமொன்றாக 1958 யூன் மாதம் 01ஆந் திகதி தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாபநிதியைக் குறிப்பிடலாம்.


ஆரம்பம் முதல் இன்று வரை இந் நிதியத்தின் நிருவாக நடவடிக்கைகள் தொழில் ஆணையாளர் அதிபதியினாலும், நிதி நிர்வாகம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினாலும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி நடைபெறுகின்றது.

## ஊழியர் சேமலாபநிதி

ஊழியர் சேமலாபநிதிக்குரிய உதவுதொகை, உரிய ஊழியரின் மாதாந்தச் சம்பளத்தின் 8% அல்லது 10% சதவீதமும், தொழில்தருநரினால் முறையே 12% அல்லது 15% சதவீதமும் மாதாந்தம் ஊழியருடைய பெயரிலுள்ள கணக்கில் வைப்புச் செய்வதினாலும் அந்த நிதி வைப்புச் செய்யப்பட்ட மத்திய வங்கியினால் மாதாந்தம் ஏறக்குறைய 11% சதவீதமான வட்டி வீதம் ஊழியர் சேமலாபநிதியின் உதவு தொகையில் உள்ளடக்கப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தினை வலிமையுடைதாக்கும்போது சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சட்டத்தினால் உள்ளடக்கப்படுகின்ற சகல ஊழியர்களினதும் உதவுதொகை, உரிய தொழில் தருநர்களினால் அடுத்த மாத இறுதித்தினத்தன்று அல்லது அதற்கு முன் இலங்கை மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்படவேண்டும்.

கடந்த 05 ஆண்டு காலப் பகுதியிலுள்ள உதவு தொகை சேகரித்தலின் முன்னேற்றம் கீழ் வரும் புள்ளிவிபர அட்டவணையின் மூலம் காட்டப்பட்டுள்ளது.



## ஊழியர் சேமலாபநிதியினை அறவிடுதல், கணினிமயப்படுத்தல் மற்றும் அதிலுள்ள முன்னேற்றம்

ஊழியர் சேமலாபநிதியினை மதிப்பீடு செய்யும் தகவல்முறை, நுவரெலியா மாவட்ட அலுவலகம் தவிர்ந்த ஏனைய மாவட்ட அலுவலகங்களிலும் நாவலப்பிட்டி, பெலியத்த, வென்னப்புவ மற்றும் வறக்காப்பொல உப அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ளது. இந்தத் தகவல் முறை நிறுவப்பட்டதன் பின்னர் 2014ஆம் ஆண்டில் 7922 முதலாவது அறிவித்தல்களும், 6008 இறுதி அறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன் அறவிடப்பட்ட பணத்தொகை ரூபா 278,632,201.00 ஆகவுள்ளது. மேலும் ஊழியர் சேமலாபநிதிக்குரிய செலுத்துகைகள் தொடர்பான தகவல் முறை நாடுபூராகவுமுள்ள மாவட்ட அலுவலகங்களிலும் நாவலப்பிட்டி மற்றும் பெலியத்த உப அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட சேமலாபநிதி மதிப்பீடு தொடர்பான நடவடிக்கை விடயத்தினை சமர்ப்பிக்கையில் 31.12.2014 தினத்தன்று திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சேமலாபநிதியின் எண்ணிக்கை 157 ஆகும். 2014 ஆம் ஆண்டில் பரிசோதனை செய்யப்பட்ட தாபனங்களின் எண்ணிக்கை 214 ஆகும். முறைப்பாட்டு பரிசோதனைகளின் எண்ணிக்கை 165 ஆகும்.

# தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

பலவிதமான வேலைத்தளங்களில் பல்வேறு விதமான சேவையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் தங்களது சேவையை நிறைவேற்றும்போது பல்வேறு வகையில் தொழில்சார் ஆபத்து மற்றும் தொழில்சார் விபத்துக்கள், நோய்களுக்கு உள்ளாகின்றனர். தற்போது தொழிலாளர்கள் மாசடைந்த வேலைச்சூழலில் பணிபுரிவதனால் உபத்திரவத்திற்கு உள்ளாகின்றார்கள் என அடிக்கடி கேள்விப்படக் கூடியதாகவும், காணக்கூடியதாகவுமுள்ளது. இந்தத் துரதிஷ்டமான நிலைமையை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், தொழிலாளர் சமூகத்தின் நலன்புரி மற்றும் தொழிற்பாதுகாப்பு சுகாதாரம் என்பவற்றினை மேம்படுத்தத் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதுடன், தொழில் திணைக்களம் மேற்படி விடயத்தில் அதிக கவனத்துடன் செயற்படும்.

இந்த நடவடிக்கை தொடர்பாக திணைக்களத்தில் பொறுப்புக் கூறக் கூடிய பிரிவாக தொழிற்சுகாதாரப் பிரிவு மற்றும் தொழில் பாதுகாப்பு பிரிவு என்பன செயல்படுகின்ற அதேவேளை சிறப்பான, தொழில் ஆபத்துக்கள் அற்ற வேலைச்சூழல் மற்றும் சுகாதாரமான தொழில் சமுதாயத்தினை உருவாக்குவதற்கு தோள் கொடுப்பதுடன் நல்லதொரு சேவை நிலைமைகளில் தொழிலாளர்களுடைய வினைத்திறன் மற்றும் கைத்தொழில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது தொடர்பாக கவனத்தைச் செலுத்தும்.

1942 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கத் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப வேலைத்தளத்தில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரிசேவை வழங்குதல் கட்டாயமானதும், முக்கியமானதுமான சட்டத் தேவைப்பாடாகும்.

‘‘தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்’’ தொடர்பாக தொழிற்றிணைக்களத்தின் கைத்தொழில் பாதுகாப்பு பிரிவு மற்றும் தொழில்சார் சுகாதாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

கைத்தொழில் பாதுகாப்பு பிரிவின் அனுசரணையுடன் ‘‘தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்’’ என்பதனைக் கொண்டாடுமுகமாக, பல தனியார்துறை உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக தொழில்புரியும் சமூகத்திற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன், மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர்களின் பங்களிப்பினூடாக மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

ஊழியர் சேமலாப நிதியின் மருத்துவ சிபார்சுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான மருத்துவ சபையின் எண்ணிக்கை 12 ஆகும், அத்துடன் சிபார்சுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு பரிசோதனை செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 650 ஆகும். இயலாமைக்குட்பட்ட ஊழியர்களைப் பரிசோதித்து நட்ட ஈட்டிற்குச் சிபார்சு செய்து 62 ஊழியர்களுக்கு நட்டஈடுபெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொழில்சார் சுகாதாரப் பிரிவின் அனுசரணையுடன் தனியார்துறை சேவை மற்றும் உற்பத்தி நிறுவனங்கள் சிலவற்றினால் தொழில்சார் சுகாதாரம் தொடர்பாக ஊழியர்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய பாதுகாப்பு விருது வழங்குதல் தொடர்பாக வெளிக்கள பரிசோதனை மதிப்பீடு கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு பொறியியலாளர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

# பெண்கள் மற்றும் சிறுவர்கள் விடயப் பங்களிப்பினை நோக்கி

## பெண்கள் விவகாரம்

இலங்கையில் உற்பத்தி நடைமுறையில் விசேட பங்களிப்பு பெண் தொழிலாளர்களினால் நிறைவேற்றப்பட்டதுடன், அவ்வாறாக வேலைசெய்யும் பெண்களுடைய தொழில் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு போன்று பெண்கள் சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பாக வசதிகள் மற்றும் சலுகைகளைத் திட்டமிடுதலை நோக்காகக் கொண்டு தொழில்திணைக்களத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் நடவடிக்கைப் பிரிவினால் விசேட சட்டத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## சிறுவர்கள் விவகாரம்

தொழிலில் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரங்கள் பிரிவு, மாவட்ட தொழிலில் அலுவலகங்களுடன் இணைந்து சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல், சிறுவர் தொழிலுக்கு எதிராக தொழிற்படல், வேலை செய்வதற்கான சிறுவர்களின் குறைந்த வயதினைத் தீர்மானித்தல் மற்றும் சிறுவர் தொழிலின் ஆபத்தான வடிவங்கள் பற்றிய பகுப்பாய்வுகளையும், ஆராயச்சிகளையும் மற்றும் புலனாய்வுகளையும் நடாத்துகின்றது.

வீட்டுவேலைகளில் சிறுவர் தொழிலாளர்களை தொழிலில் அமர்த்துவது மற்றும் ஏனைய அபாயகரமான தொழில் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகளாக சிறுவர் தொழிலை முற்று முழுதாக ஒழிக்கும் நோக்குடன் பெறப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதிலும் அத்தகைய தொழில்தருனர்களை நீதிமன்றத்தின் முன்னிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதிலும் ஈடுபடுகின்றது. சிறுவர்கள் தேசியத்தின் இளம் இரத்தம் என்ற வகையில் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேலோங்கச் செய்வது பிரபஞ்சத்தின் பொறுப்பாகும்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவினால் பின்வரும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. 1956 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துதல் சட்டம்.
2. 1939 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம்
3. 1954 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் (பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் சம்பந்தமான பகுதி) சட்டம்
4. 1942 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் (பெண்கள் மற்றும் இளம் ஆட்கள் சம்பந்தமான பகுதி)

## சர்வதேச மகளிர் தினம்

சர்வதேசமகளிர் தினத்தை நினைவு கூருகையில் 2014 மார்ச் 08ஆந் திகதியன்று, பாடசாலையை விட்டுவிலகிய யுவதிகள் மற்றும் குறைந்த வருமானம் உள்ள 200 பெண்களுக்கு பிலியந்தலையில் ஒருநாள் பயிற்சி பட்டறை நடாத்தப்பட்டது.

## உலக சிறுவர்கள் தினம்

உலக சிறுவர் தினத்தை நினைவு கூருமுகமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானமுள்ள பாடசாலை சிறுவர்களுக்கான மருத்துவ சிகிச்சையும், பாடசாலையை விட்டு விலகுவதனை தடுக்கும் முகமாக குறைந்த வருமானமுள்ள பாடசாலை சிறுவர்களில் 400 சிறுவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

பெருந்தோட்டத்துறையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்காக, பெண்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பினை உருவாக்கக்கூடிய சட்டங்களுடன் தொடர்புடைய 20 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டம் மாவட்டத் தொழில் அலுவலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. அத்துடன் ஒவ்வொரு நிகழ்சித்திட்டத்திலும் 30 தொழிலாளர்களின் பங்கு பற்றுதலுடன் நடாத்தப்பட்டது.

பணிபுரியும் பெண்களுக்கிடையே விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு 70 கருத்தரங்குகளை நடாத்துவதற்கு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருந்தது. (பெண்களுக்குரித்தான சட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு சட்டங்கள் தொடர்பாக) அதில் 57 கருத்தரங்குகள் நடாத்தி முடிக்கப்பட்டிருந்தன.

கட்டுநாயக்கா, பியகம, கொக்கலை மற்றும் அவிசாவளை ஆகிய இடங்களிலுள்ள முதலீட்டு வலயங்களிலிருக்கின்ற பெண் பணியாளர்களுக்காக தனியான மற்றும் மனநிலை ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

## இரவு நேரங்களில் பெண்களை பணியில் அமர்த்துதல்

இரவுநேரங்களில் பெண்களை பணியில் அமர்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து 125 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 116 பரிசோதனைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. பெண்களை இரவு நேரத்தில் பணியில் அமர்த்துவதற்கு 315 நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. பெண்களை இரவு நேரங்களில் பணியில் அமர்த்துவது தொடர்பாக 10 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன் இது தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

## சிறுவர் ஊழியம் பற்றிய முறைப்பாடுகளும் புலன் விசாரணைகளும்

தொழில் திணைக்களத்தின் பெண்கள், சிறுவர் பிரிவு, பல்வேறுபட்ட தனிப்பட்டவர்களிடமிருந்தும், பெயர் குறிப்பிடுகின்ற நிறுவனங்களிடமிருந்தும் அத்துடன் பெண்கள், சிறுவர் பணியகத்தினதும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினதும் ஒத்துழைப்புடன் அனாமதேயமாகப் பெறப்படுகின்ற சிறுவர் ஊழியம் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதிலும் சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தும் தொழில் தருனர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் ஈடுபடுகின்றது. இதன்படி

- 2014ல் சிறுவர் ஊழியம் பற்றி திணைக்களத்தினால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை - 141
- சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை (நீதிமன்ற வழக்குகள்) - 09
- சட்டநடவடிக்கை பூர்த்தியாகாது நிலுவையாக இருப்பவற்றின் எண்ணிக்கை - 02
- சிறுவர் ஊழியம் பற்றி வெளிப்படுத்தப்படாதவற்றின் எண்ணிக்கை - 67
- புலன்விசாரணையின் கீழ் இருப்பவற்றின் எண்ணிக்கை - 63

சமூகப் பணியாளர்களுக்கிடையே 31 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், தீங்கிழைக்கின்ற தொழிலாக இனங்காணப்பட்டவற்றில் சிறுவர்களை ஊழியத்திலமர்த்துவதனை தடுக்கும் முகமாக கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நடைபெற்றது. இவற்றில் 20 நிகழ்ச்சித்திட்டங்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் கேகாலை மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் நடைபெற்றன.

# தொழில் திணைக்களத்தின் பொதுநிர்வாகம்

தொழில்திணைக்களம் எப்பொழுதும் மக்களுடன் இருக்கின்றது. அத்துடன் பெறுமதியான சேவையை தங்களால் பயன்பெறுபவர்களுக்கு வழங்குவதற்கு அர்ப்பணிப்புடனும் விழிப்புணர்வுடனும் செயல்படும் அதிகளவான அலுவலர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஆகவே இவ்வாறான பெறுமதியான சேவையை வழங்கும் தொழில் திணைக்களத்தில் சேவையாற்றும் ஊழியர்கள் சமூகம் எப்பொழுதும் திருப்தியாக தங்களது சேவையை நிறைவேற்றுவதற்கு தேவையான சூழ்நிலையை வழங்குவதற்கான பின்புலத்தினை மேலும் நன்றாக ஒழுங்குபடுத்துவதனூடாக தொழில் திணைக்களத்தின் ஊழியர்களின் தலைசிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அத்தகைய முக்கிய வகிபாகத்தினை பொறுப்பு ஏற்றுள்ள தொழில் திணைக்களம் தாபனக்கிளை என அழைக்கப்படுகின்ற நிருவாகப் பிரிவினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதற்குரிய காரணம் அதியுச்சப் பயனைப் பெறுவதற்கு திணைக்களத்தின் பௌதீக, மனித மற்றும் நிதி மூலவளங்கள் நிருவாகப் பிரிவினால் முகாமைத்துவம் செய்யப்படுவதாகும். அத்துடன் இது திணைக்களத்தினதும் அதனது அலுவலர்களினதும் முன்னேற்றத்திற்கு காரணமாகின்றது.

பின்வரும் வகையில் தாபனப் பிரிவு 2014ஆம் ஆண்டில் செய்த வகிபாகத்தினை விபரிக்க முடியும். புதிய ஆட்சேர்ப்பாக தொழில்திணைக்களத்தில் பதவியுயர்வு பெற்ற உதவித் தொழில் ஆணையாளர்கள், சட்ட அலுவலர்கள் ஊழியர் சேமலாபநிதி நடவடிக்கை தொடர்பான எழுதுவினைஞர்கள், விடுதி தலைவிகள், சாரதிகள், மற்றும் அலுவலக உதவியாளர்கள், காவலாளிகள் உட்பட 47 நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| உதவித் தொழில் ஆணையாளர்கள் (திணைக்களம் ) | - | 15 |
| சட்ட அலுவலர்கள் | - | 02 |
| எழுது வினைஞர்கள் (ஊழியர் சேமலாபநிதி) | - | 13 |
| விடுதி தலைவிகள் | - | 02 |
| சாரதிகள் | - | 05 |
| அலுவலக உதவியாளர்கள் | - | 02 |
| காவலாளிகள் | - | 08 |

இணைந்த சேவைகள் மற்றும் நாடு பூராகவும் சேவைகளுக்காக திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உதவித் தொழில் ஆணையாளர்கள் 12 பேரும், இலங்கை பொறியியல் சேவையைச் சேர்ந்த 05 பேரும், ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஒரு அலுவலரும் தொழில் திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். தொழில் திணைக்களத்தில் பணிபுரியும் பதவிநிலை அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதற்கு 2014ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. அதனூடாக உரிய உந்து சக்தியினை அளிப்பதன் மூலமும் அலுவலர்களை ஊக்கப்படுத்துதவன் மூலமும் பயனளிக்கும் சேவையினைப் பெறுவதற்கு முடியும்.

## திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு.

திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு தொழில் திணைக்களத்தின் எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனை நோக்கி வருடாந்த செயற்பாட்டு திட்டத்தினை தயாரித்தல், அந்த திட்டம் சரியாகவும், குறிப்பாகவும் கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கையொன்றின் கீழ் முன்னேற்றம் தொடர்பாக உரிய பின்தொடர் நடவடிக்கைகளினால் வருட இறுதிக்குள் குறிக்கோளை நிறைவேற்றுவது நிரூபிக்கக் கூடிய வேலைத்திட்டமொன்றாக அமைவதாகவும், வருடாந்த நிருவாக அறிக்கையை தயாரித்து தொழில் ஆணையாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பது திட்டமிடுதல் பிரிவின் பங்களிப்பின் ஒரு பகுதி என சுட்டிக்காண்பிக்க முடியும். மேலும் இந்தப் பிரிவிற்கு மற்றுமொரு மிகமுக்கியமான நடவடிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. அதாவது தொழில் திணைக்களத்தில் உள்ள சகல அலுவலர்களுக்கும் தொழில் முன்னேறத்தினை நோக்கித் தேவையான பயிற்சிகளை அளிப்பதன் மூலம் குறிப்பிட்ட ஒரு செயலைத் தூண்டுவதனைக் காணக்கூடியதாகவுள்ளதுடன் LISA என அழைக்கப்படுகின்ற Labour Inspection Statistical Analyze" (''தொழில் பரிசோதனை புள்ளி விபரம் பகுதி") எனப்படும் கணினி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவது மற்றும் அந்த கணினி பாடநெறி பயிலும் தொழில் அலுவலர்களுக்கு Tab கணினியை வழங்குவது திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி, வெளியீட்டு பிரிவின் பொறுப்பு ஆகும்.

அவிசாவளை, வெரளுப்பிட்டிய பகுதியில் நிறுவப்பட்டுள்ள தொழில்திணைக்களத்திற்குரிய கட்டிடத்தில் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள தங்கியிருந்து பயிற்சிபெறும் மத்திய நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கையும் திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவுக்குரியது எனச் சுட்டிக்காட்டமுடியும்.

திணைக்களத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதுமட்டுமன்றி தேசிய தேவைப்பாடுகள் தொடர்பில் இந்தப் பிரிவினூடாக உரிய ஆராய்ச்சி நடவடிக்கை இடம்பெறுவதுடன், வருடாந்த தொழில் மதிப்பீடு மற்றும் சராசரி உழைப்பு மற்றும் வேலை செய்யும் நேர எண்ணிக்கை தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை வெளியீட்டு வைப்பது தொழில்திணைக்களத்தினூடாக நிறைவேற்றப்படுகின்றது. திட்டமிடுதல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் மற்றுமொரு செயற்பாடு அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் நிகழ்கால முக்கிய தகவல் தொடர்பாக பெறப்பட்ட தரவினை வெளியிட்டுவைத்தலாகும்.

## நூலகம் மற்றும் தொழில் அரும்பொருளகம்

தொழில் திணைக்களத்துடனான தொழிற்றுறை தொடர்பான தாபனங்களின் தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் வகையில் விடயம் சார்ந்த வகையில் தகவல்களைச் சேகரிப்பது இத்திணைக்களத்தின் நூலகத்தினூடாக ஆற்றப்பட்ட சேவைகளில் முதலிடத்திலிருப்பதுடன் தேவையான போது அவற்றைப் பரப்புவதும், அதனூடாக தாபனங்களின் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் அறிவினை யும், தகவல்களையும் வழங்குகின்றது. அதேபோன்று தொழில் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற தொழில் அரும்பொருளகமானது, தொழில்துறையின் பரிணாம வளர்ச்சியை மனதைக் கவரும் வகையில் காட்சிப்படுத்துகின்றது.

மேலும், தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட பழைய தொழில் கட்டளைச் சட்டங்கள், சட்டங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சேகரிப்பதுடன், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதும் தொழில் அரும்பொருளகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## பௌதீக வளங்களின் அபிவிருத்தி

உத்தேசிக்கப்பட்ட 36 தளங்களைக்கொண்ட ‘மெஹெவரபியச’’ கட்டிடத்தின் வேலை துரிதமாக இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருப்பதோடு 2014 ஆண்டின் முடிவில் ஐந்து (05) தளங்களின் ஆரம்ப வேலைகள் முடிவடைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக தற்போது அவிசாவளை, நீர்கொழும்பு, பொலன்னறுவை, பெலியத்த, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச அலுவலகங்களின் கட்டுமாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

# புள்ளிவிபரக் கையேடு

## கைத்தொழில் தொடர்புகள் பிரிவு

| | | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| **கைத்தொழில் பிணக்குகள் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| தெரிவிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | | 3,756 | 3,702 | 3,204 | 2,602 |
| தீர்க்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | | 3,384 | 3,695 | 3,077 | 2,589 |
| பதிவுசெய்யப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | | 66 | 43 | 34 | 50 |
| தொழிற்சங்கங்கள் | | | | | |
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சங்கங்கள்/ சம்மேளனங்கள் | | 76 | 114 | 108 | 125 |
| இரத்துச் செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் / சம்மேளனங்கள் | | 38 | 02 | 114 | 255 |
| கைத்தொழில் நீதிமன்றங்கள் | | | | | |
| கட்டாய நடுத்தீர்ப்பிற்கு விடப்பட்டவை | | 69 | 43 | 49 | 53 |
| வழங்கப்பட்ட தீர்த்தளிப்புக்கள் | | 35 | 26 | 35 | 42 |
| பணி நிறுத்தம் பற்றிய புள்ளிவிபரங்கள் | | | | | |
| தெரிவிக்கப்பட்ட பணி நிறுத்தம் | தோட்டங்கள் | 14 | 14 | 22 | 31 |
| | தாபனங்கள் | 07 | 20 | 20 | 07 |
| பங்குபற்றிய வேலையாளர்களின் எண்ணிக்கை | தோட்டங்கள் | 2,713 | 4,338 | 5,031 | 4,833 |
| | தாபனங்கள் | 3,742 | 5,626 | 6,088 | 1,618 |
| இழக்கப்பட்ட உழைப்பு நாட்கள் | தோட்டங்கள் | 9,877 | 25,043 | 41,669 | 29,165 |
| | தாபனங்கள் | 15,543 | 10,774 | 38,754 | 8,158 |
| தொழில் முடிவுறுத்தல் பிரிவின் செயற்பாடுகள் | | | | | |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 86 | 92 | 134 | 149 |
| தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 111 | 143 | 112 | 148 |
| தொழில் முடிவறுத்தலுக்காக அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | 29 | 31 | 41 | 51 |
| சமூகக் கலந்துரையாடல் மீதான நிகழ்ச்சித்திட்டம் | | | | | |
| சமூகக் கலந்துரையாடல் அலகினால் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 98 | 153 | 107 | 88 |
| | சமுகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 4,864 | 4,751 | 6,560 | 5,433 |
| மாவட்ட, உப அலுவலகங்களினால் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 124 | 225 | 214 | 199 |
| | சமுகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 4,478 | 7,902 | 7,768 | 6,861 |

2014.12.31 இல் தொழிற்படுகின்ற தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை - 2009

2014.12.31இல் தொழிற்படுகின்ற தொழிற்சங்க சம்மேளனங்களின் எண்ணிக்கை – 26

## சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு

| சட்டம் | தாக்கல்செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** |
| பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | **4,092** | **3,404** | **2,371** | **2,044** |
| கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | **72** | **77** | **126** | **146** |
| தொழில் முடிவுறுத்தல் சட்டம் | **65** | **59** | **58** | **36** |
| சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | **238** | **290** | **203** | **244** |
| கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | **80** | **132** | **112** | **88** |
| மகப்பேற்று நன்மைகள் சட்டம் | **01** | **02** | **05** | **03** |
| பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலில் அமர்த்துதல் சட்டம் | **05** | **10** | **07** | **11** |
| ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | **3,483** | **3,210** | **3,415** | **3,244** |
| தொழில் நியாயசபைக் கட்டளைகள் | **153** | **165** | **144** | **183** |
| வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச்சட்டம் | **54** | **134** | **22** | **32** |
| அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | **-** | **07** | **01** | **07** |

## விசேட புலனாய்வுப் பிரிவு

| | **2011** | **2012** | **2013** | **2014** |
|---|---|---|---|---|
| முறைப்பாடுகள்மீதான புலன்விசாரணை | **241** | **264** | **122** | **216** |
| கணிக்கப்பட்ட ஊ.சே.நிதியத்தின் வரவேண்டிய நிலுவைத்தொகை (ரூபா.ஆயிரத்தில்) | **153,483** | **313,770** | **28,012** | **32,416** |
| கணிக்கப்பட்ட நிதியச்சட்டப் பணங்களின் பெறுமதி (ரூபா.ஆயிரத்தில்) | **12,295** | **40,831** | **5,814** | **2,970** |

## ஊழியர் சேமலாபநிதிப் பிரிவு

| | 2011.12.31 வரை | 2012.12.31 வரை | 2013.12.31 வரை | 2014.12.31 வரை |
|---|---|---|---|---|
| அங்கத்தவர்கள் கணக்குகளின் மொத்தம் | 13,993,089 | 14,559,328 | 15,203,073 | 15,449,037 |
| தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை | 192,044 | 198,893 | 204,777 | 206,629 |
| நிதியத்தின் பெறுமதி (ரூபா.மில்லியன்) | 1,017,7 04 | 1,144,409 | 1,299,974 | 1,486,931 |
| செயற்பாடுடைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை (மில்லியன்) * | 2.21 | 2.34 | 2.40 | 2.01 |
| செயற்பாடுடைய தொழில் தருநர்களின் எண்ணிக்கை ** | 64,562 | 68,140 | 69,148 | 71,000 |

| | | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| புதிய பதிவுகள் | பணியாளர்கள் | 750,338 | 785,078 | 813,010 | 429,605 |
| | தொழில்தருநர்கள் | 6,403 | 7,195 | 7,802 | 6,800 |
| நன்மைக் கொடுப்பனவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 120,301 | 115,654 | 114,275 | 127,942 |
| | செலுத்தப்பட்ட நன்மைகள் (ரூபா.மில்லியன்) | 47,311 | 48,712 | 50,407 | 64,325 |
| உதவுதொகைகளைச் சேகரித்தமை (ரூபா மில்லியன்) | | 61,879 | 70,171 | 77,335 | 83,000 |
| ஊ.சே.நி வீடமைப்புக் கடன்கள் | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 20,041 | 11,234 | 16,268 | 17,747 |
| | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா மில்லியன்) | 6,355 | 3,973 | 6,914 | 8,000 |

✷ ஆண்டுகாலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் உதவித் தொகை செலுத்தப்பட்டுள்ள அங்கத்தவர்கள் கணக்குகள்.

✷✷ ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் பணியாளர்கள் சார்பாக உதவித்தொகைகளைச் செலுத்தியுள்ள தொழில்தருநர்கள்.

### தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

| | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | 20,971 | 22,459 | 23,974 | 25,236 |
| செய்யப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 4,749 | 6,700 | 6,372 | 5,067 |
| பரிசோதகர்களின் எண்ணிக்கை (பொறியியலாளர்கள்) | 27 | 28 | 28 | 30 |
| திட்டங்களுக்கான அங்கீகாரம் | 122 | 106 | 97 | 80 |
| விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள். | 294 | 229 | 218 | 17 |

### தொழில்சார் சுகாதாரப் பிரிவு

| | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| தொழிற்சாலை பரிசோதனைகளின் எண்ணிக்கை | 220 | 410 | 352 | 250 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 193 | 137 | 190 | 296 |

## திட்டமிடல், ஆராய்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

| | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| பதவிநிலை அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 22 | 4 | 14 | 18 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 14 | 8 | 17 | 23 |
| கணினிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 16 | 33 | - | 17 |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 2 | 2 | 2 | 6 |
| பட்டப் பின்படிப்பு பாடநெறிகள் | 26 | 20 | 41 | 81 |
| வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 37 | 57 | 23 | 18 |
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 7 | 5 | 6 | 5 |

## நிதிப் பிரிவு

| | | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| மீண்டெடுழும் செலவினம் | ஏற்பாடு(ரூபா) | 967,407,000.00 | 1,100,630,000 | 1,138,550,000 |
| | செலவினம்(ரூபா) | 953,894,760.00 | 1,016,129,728 | 1,117,107,412 |
| மூலதனச் செலவினம் | ஏற்பாடு (ரூபா) | 372,365,000.00 | 760,275,000 | 373,200,000 |
| | செலவினம்(ரூபா) | 299,512,890.00 | 732,936,934 | 306,883,421 |

**தாபனப் பிரிவு**

| | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|
| **ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தப் பதவியணி** | 2,271 | 2,219 | 2,169 |
| • திணைக்களத்தினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் | 23 | 1 | 32 |
| • இணைந்த சேவையின் புதிய நியமனங்களாகச் சேர்க்கப்பட்டவர்கள் | 30 | 37 | 163 |
| • இடமாற்றல்கள் (நிகரம்) | (7) | (1) | (10) |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினருடன் சேர்க்கப்பட்டவர்கள் | 1 | - | 5 |
| • ஓய்வுபெற்றவர்கள் | (52) | (55) | (50) |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினர் விலகுதல் | (47) | (32) | (53) |
| **ஆண்டின் இறுதியில் மொத்தப் பதவியணி** | 2,219 | 2,169 | 2,256 |

# பின்னிணைப்பு

திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு

